டெலிமெடிசின் வசதிகள் பரவலாக்கம்: அமைச்சர் கே.ஜி.அருண்ராஜ்

ஒசூர், ஆக. 29: அனைத்து மாவட்ட மற்றும் வட்ட அளவிலும் சிறப்பு மருத்துவ சேவைகள் மற்றும் டெலிமெடிசின் வசதிகள் பரவலாக்கப்பட்டு வருகின்றன என தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் கே.ஜி.அருண்ராஜ் தெரிவித்தார்.

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி நரம்பியல் நிபுணர்கள் சங்கத்தின் சார்பில், 14-ஆவது ஆண்டு மாநில நரம்பியல் மாநாடு ஒசூரில் வெள்ளிக்கிழமை தொடங்கி ஞாயிற்றுக்கிழமை வரை 3 நாள்கள் நடைபெறுகிறது.

இம்மாநாட்டின் 2-ஆவது நாளான சனிக்கிழமை தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் கே.ஜி.அருண்ராஜ் முதன்மை விருந்தினராகப் பங்கேற்று 3 மருத்துவ மலர்களை வெளியிட்டு பேசியது:

தமிழக அரசு மருத்துவ கட்டமைப்பை மேம்படுத்துவதில் தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருகிறது. கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரிக்கு கேத் லேப் வசதிகள், உள்கட்டமைப்பு விரிவாக்கம் மற்றும் 36 புதிய முதுநிலை மருத்துவ இடங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. சென்னை போன்ற பெருநகரங்களுக்கு மட்டுமின்றி, அனைத்து மாவட்ட மற்றும் வட்ட அளவிலும் சிறப்பு மருத்துவ சேவைகள் மற்றும் டெலிமெடிசின் வசதிகள் பரவலாக்கப்பட்டு வருகின்றன. மருத்துவர்கள் தங்கள் பணி அழுத்தத்தைக் குறைக்க வாழ்க்கை சமநிலையைப் பேண வேண்டும். கலை, இலக்கியம் மற்றும் புதிய பொழுதுபோக்குகளில் ஈடுபட வேண்டும் என்றார்.

சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற பெங்களூரு இந்திய அறிவியல் கழகத்தின் பேராசிரியர் மற்றும் மூத்த விஞ்ஞானி சுந்தர் சுவாமிநாதன் பேசுகையில், எளிய மற்றும் குறைந்த செலவிலான மருத்துவ கண்டுபிடிப்புகள் அடித்தட்டு மக்களுக்கும் சென்றடைய வேண்டும். இந்தியாவில் மருத்துவ ஆராய்ச்சிகளுக்கான முதலீடுகள் அதிகரிக்க வேண்டும் என்றார்.

இதில், கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் சத்யபாமா, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி நரம்பியல் சங்கத் தலைவர் எல்.சங்கரநாராயணன், செயலாளர் கே.முகுந்தன், மாநாட்டின் அமைப்புக் குழு தலைவர் ரங்கராஜ், அமைப்புக் குழு செயலாளர் சந்திரசேகரன், இலங்கை யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மற்றும் சிங்கப்பூர் பல்கலைக்கழக மருத்துவ பேராசிரியர்கள், மருத்துவர்கள், மருத்துவ மாணவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

முன்னதாக, மாநாட்டுக் குழுத் தலைவர் டாக்டர் ரங்கராஜன் வரவேற்றார்.

ஒசூரில் நடைபெற்ற நரம்பியல் மாநாட்டில் மருத்துவ மலரை வெளியிட்ட தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் கே.ஜி.அருண்ராஜ்.

இருசக்கர வாகனங்களை திருடிய 2 பேர் கைது

தருமபுரி, ஆக. 29: தருமபுரியில் இருசக்கர வாகனங்களை திருடிய 2 பேரை சனிக்கிழமை கைது செய்த போலீஸார், அவர்களிடமிருந்து 7 வாகனங்களை பறிமுதல் செய்தனர்.

தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் காவல் ஆய்வாளர் தவமணி, உதவி ஆய்வாளர் பெருமாள் மற்றும் போலீஸார் கும்பாரஅள்ளி சோதனைச் சாவடி அருகில் அண்மையில் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டனர்.

அப்போது, அவ்வழியே சந்தேகத்துக்கிடமான வகையில் இருசக்கர வாகனத்தில் வந்த இருவரை பிடித்து விசாரணை செய்தனர். அதில், அவர்கள் வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த விக்னேஷ், சந்துரு என்பதும், இருவரும் இருசக்கர வாகனத் திருடர்கள் என்பதும் தெரியவந்தது. இதையடுத்து, இருவரையும் கைது செய்த போலீஸார் மேற்கொண்ட விசாரணையில், இவர்கள் ஏராளமான இருசக்கர வாகனங்களை திருடி விற்பனை செய்தது தெரியவந்தது. அந்தவகையில், அவர்களிடம் இருந்து அண்மையில் திருடப்பட்ட 7 இருசக்கர வாகனங்களை போலீஸார் பறிமுதல் செய்தனர்.

தன் தாய், மகளை வெட்டிக் கொன்றவர் கைது

அரூர், ஆக. 29: பாப்பிரெட்டிப்பட்டி அருகே தாய், மகளை வெட்டிக் கொலை செய்தவரை போலீஸார் சனிக்கிழமை கைது செய்தனர்.

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், அதிகாரப்பட்டி அம்மன் நகரை சேர்ந்தவர் சுரேஷ் (45), சமையல் கலைஞர். இவரது மனைவி ஷாலினி, கணவரை பிரிந்து சேலத்தில் ஓர் உணவகத்தில் வேலை செய்து வருகிறார். சுரேஷ் தனது தாய் உமாராணி (65) மற்றும் மகள் சின்மயா (19) உடன் வசித்து வருகிறார்.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை இரவு மது போதையில் வந்த சுரேஷ், சின்மயாவிடம் சாப்பாடு கேட்டுள்ளார். உணவு எடுத்துவந்து கொடுத்த போது, உங்களால்தான் எனது மனைவி பிரிந்து வாழ்கிறாள் எனக் கூறி கையில் வைத்திருந்த கொடுவாளால் சின்மயாவை சரமாரியாக வெட்டினார். சின்மயாவின் அலறல் சப்தம் கேட்டு வந்த உமாராணியையும் வெட்டியுள்ளார். இதில் உமாராணி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

படுகாயமடைந்த சின்மயாவை அக்கம் பக்கத்தினர் மீட்டு பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். தொடர்ந்து மேல்சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சைப் பலனின்றி சனிக்கிழமை உயிரிழந்தார். இதுகுறித்து அ.பள்ளிப்பட்டி போலீஸார் வழக்குப் பதிந்து சுரேஷை கைது செய்தனர்.

அதிமுகவில் இணைந்த மாற்றுக் கட்சியினர்...

தருமபுரியில் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அதிமுகவில் இணையும் நிகழ்ச்சி சனிக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பேசிய அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி.

PUBLIC NOTICE

This is to inform to General Public that My Client **Mr. Krishnamoorthy S/o. Mr. Pachiyappan,** residing at Door No. 2/103, Muthugoundan Kottai,Reddiyur, Dharmapuri Taluk & District, Tamil Nadu State has represented that he lost his Original Parent Documents i.e., 1. Regd. General Power of Attorney Deed Doc. No.973/2012 dated 17.09.2012 of SRO Hosur, 2. Regd. Sale Deed Doc. No.18701/2013 dated 23.12.2013 of SRO Hosur relating to the property situated in Govinda Agraharam Village, Sy. No.45/5, the above said land has been divided into house sites and layout has been formed in which Plot No.1 measuring an extent of 1500 Sq. Feet of land. In this regard my client who is the Present Owner namely **Mr. Krishnamoorthy S/o. Mr. Pachiyappan** filed an online complaint in Tamilnadu Police- CCTNS Citizen Portal Website and got an online acknowledgement bearing reference No.OLC9222600052579 dated 28.08.2026. My client hereby issue notice to the General Public that if any person has in any manner right, title, claim and/or interest in respect of the above mentioned land and found the said misplaced Deeds anywhere, he/she may inform to me or to my client in writing within 7 days from the date of publication of this notice, failing which my client shall treat a Certified true Copies of the above said misplaced Documents as original for further transactions/Alienations. Thereafter no claim will be entertained.

By
K. Velayudham., M.Sc., M.L.,
Advocate & Notary Public,
Hosur.
Mobile-94430 93345.

Date: 30.08.2026
Place: Hosur

பஞ்சாப் நேஷனல் வங்கி
punjab national bank

பஞ்சாப் நேஷனல் வங்கி, வட்ட அலுவலகம், கந்தா என்கிளேவ்,
எண்.179, சரோஜினி வீதி, ராம்நகர், கோயம்புத்தூர் - 641 009.
போன் : 0422 - 2238838, மின்னஞ்சல் : cocoimgad@pnb.bank.in

அலுவலகத்திற்கு கட்டிடம் தேவை

பஞ்சாப் நேஷனல் வங்கிக்கு, நல்லமுறையில் கட்டப்பட்டுத் தயார் நிலையில் நெடிய ஹால் டைப்பிலுள்ள கட்டிடம் **ATM**-மிற்கான இடத்துடன் சேர்த்து, கீழே குறிப்பிட்ட வேறுபல அமைவிடங்களின் உள்ளுறைப் பரப்பின்படி, குறிப்பாக தரைத்தள சாய்வு தளத்துடன் மற்றும் முதல் தளத்திலிருப்பின் மின்தூக்கி (லிப்ட் வசதியுடன் கூடியதாக குத்தகை / வாடகை அடிப்படையில் வளர்ந்து வரும் பகுதியில் தேவைப்படுகிறது.

அமைவிடம்	மாவட்டம்	அமைவிட வகை	பரப்பு (ATM உடன்)
குனகிரி	கிருஷ்ணகிரி	ஹால்	1300-1700

கொடுக்கப்படும் கட்டிடம் அனைத்து சட்டபூர்வ ஆணைக்குழுக்களின் அனைத்து தகுதிச் சான்றினையும் பெற்றிருக்க வேண்டும். விருப்பமுள்ள கட்டிட உரிமையாளர்களோ / சட்டப்படி பதிவுபெற்ற அவர்களது அங்கீகார முகவர்களோ, கோரப்படும் பகுதியில் தயார் நிலையில் உள்ள தங்கள் கட்டிடத்தை நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் குறைந்தது 15 ஆண்டுகள் அதற்குமேல் விட விருப்பமுள்ளவர்கள் தங்களது கோரிக்கை (ஆபர்)களை வங்கியின் வலைதளமான **www.pnbindia.in** இல் உள்ள தளத்தினின்று குறிப்பிட்ட படிவத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளவோ அல்லது மேற்குறிப்பிட்ட முகவரியில் உள்ள அலுவலகத்தில் வேலை நேரத்தில் பெற்றுக் கொள்ளவோ செய்யலாம். பூர்த்திசெய்யப்பட்ட (ஆபர்) கோரிக்கைப்படிவங்கள் முறையாக மூடி முத்திரையிடப்பட்டு, கீழே ஒப்பமிட்டுள்ள அலுவலருக்கு **15.09.2026 மாலை 4 மணி** அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரிக்குக் கிடைக்குமாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

வங்கி இதற்கென எந்த ஒரு தரகுத் தொகையும் வழங்காது. காரணம் எதும் காட்டாது எந்த ஒரு அல்லது அனைத்து விண்ணப்பங்களையும் ஏற்பதோ அன்றி நிராகரிப்பதோ வங்கியின் தனிப்பட்ட முடிவாகும்; உரிமையுமாகும்.

தேதி : 29.08.2026
இடம் : கோயம்புத்தூர்
வட்ட தலைவர்

இண்டியன் பேங்க் Indian Bank
இலாஹாபாத் ALLAHABAD

பிற்சேர்க்கை – IV– A (பார்க்க – விதி 8(6) க்கான விதி விலக்கு)
அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

பிணைச்சொத்து பாதுகாப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 – உடன் படிக்க – பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் 8(6) ன் கீழ் அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் செய்யப்பட்ட / கடன் பொறுப்புக்கு உட்படுத்தப்பட்டு, ஜாமீன் பெற்று கடனளித்த இந்தியன் வங்கி, காரிமங்கலம் கிளையின் அதிகாரப்பூர்வ அலுவலர் அவர்களால், கள சுவாதீனம் / ஆக்கபூர்வ சுவாதீனம் (அடையாள சுவாதீனம்) (எது பொருந்துமோ அது) எடுக்கப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையாச்சொத்துக்கள், ஜாமீன் பெற்று கடனளித்த இந்தியன் வங்கி, காரிமங்கலம் கிளைக்கு, **1. M/s** நியூ சரோஜினி ஜுவல்லரி, உரிமை : திரு **S** வினோத் **2.** திரு **S** வினோத், த/பெ சண்முக முதலியார் (கடன்தாரர் & ஜாமீன்தாரர்) மற்றும் **3.** திருமதி நதியா, க/பெ **S** வினோத், (கடன்தாரர், ஜாமீன்தாரர் & அடமானதாரர்). ஆகியோரிடமிருந்து **27.08.2026** ம் தேதியின் படி, நிலுவையாக உள்ள தொகை ரூ. 3,67,93,074/– (ரூபாய். மூன்று கோடியே அறுபத்து ஏழு இலட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து எழுபத்து நான்கு மட்டும்) மை வசூலிக்க "இருக்கின்ற இடத்தில் இருக்கின்ற நிலையில் மற்றும் இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் 29.09.2026 அன்று விற்பனை செய்யப்படுகின்றன.

மின்னணு ஏல முறையில் விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள சொத்துக்கான குறிப்பு விபரங்களாவன இதன் கீழ் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

விரிவான சொத்து விபரம்	திருமதி நதியா, க/பெ S வினோத் பெயரில் உள்ள சொத்து – தர்மபுரி பதிவு மாவட்டம், காரிமங்கலம் சார்பதிவு மாவட்டம், காரிமங்கலம் கிராமம், வார்டு எண். 10, ட்ரங்க் சாலை, நத்தம் பழைய சர்வே எண். 137/A ல் அமையப்பெற்ற புஞ்சை பரப்பு ஹெக் 4.38.0 புதிய உட்பிரிவு படி நத்தம் சர்வே எண். 716/9 ல் அமையப்பெற்ற 1.37 சதுர மீட்டர் (பட்டா எண். 69) மற்றும் நத்தம் சர்வே எண். 716/8 ல் உள்ள 0.31 சதுர மீட்டர் (பட்டா எண். 15) உள்ளிட்ட சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். இதன் எல்லைகளாவன கீழ்க்கண்டவாறு – கிழக்கு – சிமெண்ட் சாலை, மேற்கு – ட்ரங்க் சாலை, வடக்கு – பக்தவச்சலம் கடை கட்டிடம், தெற்கு – ஜரினா பேகம் கடை கட்டிடம்., இதன் மத்தியில் உள்ள அளவீடுகளாவன – கிழமேல் வடக்கு – 53–1/2 அடி., தென்வடல் கிழக்கு – 46–1/4 அடி., கிழமேல் தெற்கு – 43 அடி., தென்வடல் மேற்கு – 48 அடி., ஆக மொத்தம் 2273–3/4 சதுர அடி., மற்றும் அதனுடன் கூடிய அதில் கட்டப்பட்ட தரை தளம் மற்றும் முதல் தளங்களுடன் கூடிய RCC கடை கட்டிடம், த நா மி வா மின் இணைப்பு எண். 080–950–042–610 மற்றும் அதனுடன் கூடிய மாமூல் பாதை உரிமைகள் உள்ளிட்ட சொத்து.
சொத்து மீதான வில்லங்கங்கள்	தெரியவில்லை
அடிப்படை விலை	ரூ. 3,82,44,500/– (ரூபாய். மூன்று கோடியே எண்பத்து இரண்டு இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து ஐனூறு மட்டும்)
டேவணித்தொகை	ரூ. 3,83,000/– (ரூபாய். மூன்று இலட்சத்து எண்பத்து மூன்றாயிரம் மட்டும்)
ஏல அதிகரிப்பு தொகை	ரூ. 50,000/–
மின்னணு ஏல தேதி மற்றும் நேரம்	29.09.2026 காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை
சொத்து அடையாள (ID) எண்	IDIB6620627400

ஏலதாரர்கள், ஆன்லைன் விலைகோரலில் பங்கேற்க, எமது மின்னணு ஏல சேவைதாரர் **PSB alliance Pvt Ltd** – ன் வலைதளம் (**https://www.ebkray.in**) மை பார்வையிட அறிவுறுத்தப்படுகிறார்கள். தொழில்நுட்ப ரீதியான உதவிக்கு உதவி மைய எண். 8291220220 மை அழைக்கவும். பதிவு நிலையையும், டேவணித்தொகை நிலையையும் அறிந்து கொள்ள மின்னஞ்சல் முகவரி – **support.ebkray@psballiance.com** மை தயவு கூர்ந்து தொடர்பு கொள்ளவும்.

சொத்து விபரங்களுக்கும், சொத்தின் புகைப்படத்துக்கும் வலைதளம் **https://www.ebkray.in** மை தயவு கூர்ந்து பார்வையிடவும்., மேலும் இந்த தளம் தொடர்பான விசாரணைக்கு தயவு கூர்ந்து **PSB Alliance Pvt Ltd** – மை தொடர்பு எண். 8291220220 ல் தொடர்பு கொள்ளவும்.

ஏலதாரர்கள், சொத்தை வலைதளம் **https://www.ebkray.in** ல் தேடும் போது இதன் மேற்குறிப்பிட்டுள்ள சொத்து அடையாள எண்ணை பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தேதி : 29.08.2026
இடம் : காரிமங்கலம்
அதிகாரப்பூர்வ அலுவலர்

தொடர்பு நபர்கள் – 1. திரு பாலாஜி S – அலைபேசி எண். 9442247144

தருமபுரி நல்லம்பள்ளி பகுதியில்

ரூ. 24.30 கோடியில் அணுகு சாலையுடன் கூடிய மேம்பாலப் பணிகள் தொடக்கம்

தருமபுரி, ஆக. 29: தருமபுரி பகுதியில் போக்குவரத்தை மேம்படுத்த ரூ. 24.30 கோடியில் அணுகு சாலையுடன் கூடிய மேம்பாலம் அமைக்கும் பணிகள் தொடங்கியுள்ளன.

தமிழக தென் மாவட்டங்களை கர்நாடகம் உள்ளிட்ட வட மாநிலங்களோடு இணைக்கும் பிரதான சாலை (என்எச் 44) சேலம் – கிருஷ்ணகிரி – பெங்களூரு நெடுஞ்சாலையாகும். தினசரி பல்லாயிரக்கணக்கான வாகனங்கள் சென்றுவரும் இச்சாலையில், தொப்பூர் கணவாய் பகுதியில் அதிக அளவில் விபத்துகள் நிகழ்கின்றன. இதனால், அப்பகுதியில் ரூ. 975 கோடியில் உயர்நிலை மேம்பாலத்துடன் கூடிய சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2028-ஆம் ஆண்டு இப்பணிகள் முடிந்து உயர்நிலை மேம்பாலத்தில் போக்குவரத்துகள் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் தருமபுரி – கிருஷ்ணகிரி இடையே அதிக அளவில் விபத்துகள் நிகழும் இடங்கள் கண்டறியப்பட்டு, அப்பகுதிகளில் (அணுகு) இணைப்புச் சாலைகள் மற்றும் மேம்பாலங்கள் அமைக்க தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

தருமபுரி நல்லம்பள்ளி அருகே புறவடை பகுதியில் நடந்து வரும் பாலப் பணிகள்.

இதுகுறித்து நெடுஞ்சாலை ஆணைய அலுவலர்கள் கூறுகையில், தருமபுரி நல்லம்பள்ளி அருகே புறவடை பகுதியில் ரூ. 24.30 கோடியில் ஒரு மேம்பாலம் அமைக்க முடிவு செய்யப்பட்டு, அங்கு. 32-க்கு 12 மீ. அகல (பாக்ஸ்) வழியுடன் மொத்தம் 1,030 மீ. நீளத்தில் அணுகுசாலையுடன் பாலம் அமைக்கும் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

இதுதவிர, தருமபுரி மாவட்டத்தில் தொப்பைக்காரன்பட்டி, புதிய பேருந்து நிலையம் (எம்ஜிஆர் காம்ப்ளக்ஸ் அருகில்), பாளையம்புதூர் உள்ளிட்ட பகுதிகளில் அணுகு சாலைகளும் அமைக்கப்பட உள்ளன. இதில் இரு இடங்களில் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

ஏற்கெனவே, குண்டல்பட்டி, பெரியாம்பட்டி அகரம் கெரகோட அள்ளி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் அணுகு சாலையுடன் பாலப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

விபத்துகளில் 10 பேர் உயிரிழந்தால் மேம்பாலங்கள்: தேசிய நெடுஞ்சாலைகளில் பல இடங்களில் சுரங்கப் பாதைகள் மற்றும் மேம்பாலங்கள் அமைக்க பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடப்பட்டு வருகின்றன. சில இடங்களில் போராட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அருகருகே சுரங்கப்பாதைகள் அல்லது மேம்பாலங்கள் அமைக்க கோரிக்கைகள் விடப்படுகின்றன.

இவற்றைக் கருத்தில் கொண்டு தேசிய நெடுஞ்சாலை ஆணையம் சில விதிமுறைகளை வகுத்துள்ளது. அதன்படி, பாலம் அல்லது சுரங்கப் பாதைகள் அமைக்க கோரிக்கைகள் விடப்படும் இடங்களில், நிகழ்ந்த சாலை விபத்துகள் குறித்து அந்தந்த பகுதியில் உள்ள காவல் நிலையங்களில் பதிவான விபத்து விவரங்களை சேகரித்து வருகிறது.

ஓர் இடத்தில் விபத்துகள் மூலம் 10 பேர்வரை உயிரிழந்திருந்தால், அந்த இடத்தில் மேம்பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 10 பேருக்கும் குறைவாக உயிரிழப்புகள் ஏற்பட்டிருந்தால், அந்த இடங்களில் சுரங்கப் பாதைகள் அமைக்க தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நடவடிக்கை எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

பாளையம்புதூர் பகுதியில் மேம்பாலம்: தருமபுரியில் புறவடை பகுதியில் நடைபெற்று வரும் பாலப் பணிகளைத் தொடர்ந்து, பாளையம்புதூர் பகுதியில் மற்றொரு பாலம் அமைக்கப்பட உள்ளது.

இந்த பாலம் ரூ. 24 கோடியில் 32-க்கு 23 மீ. அகலத்தில் (பாக்ஸ்) மொத்தம் 887 மீ. நீளத்தில் அமைக்கப்படுகிறது. விரைவில் இப்பாலப் பணிகள் தொடங்க உள்ளன.

சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911
மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

அடையாள சுவாதீனம் அடிப்படையில்
மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு
(E-Auction Notice)
(SARFAESI சட்டம் 2002–ன் கீழ்)

SARFAESI சட்டம் **2002**, மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் அடையாள சுவாதீனம் எடுத்திருந்தார், இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை வட்டியுடன் வசூலிக்கும் விதமாக பட்டியலில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையுடன் கூடிய கேட்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தார். ஆனால் கடன்தாரர் / உத்தரவாதம் அளித்தவர் / அடமானம் வைத்தவர் கடன் நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த தவறியதால், இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) (a) மற்றும் விதி 8 மற்றும் 9 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கிக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்திட உள்ளார். இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் மூலமாக **https://baanknet.com** என்ற இணையதளத்தின் வாயிலாக மின்னணு ஏல முறையில் விற்பனை நடைபெறும்.

கிளை : ஒசூர் கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன் பெற்றவர் : M/s.அபிஷேக் இன்டஸ்ட்ரீஸ், உரிமையாளர்: திருமதி.கனிமொழி, க/பெ.மோகன்ராஜ், பிளாட் எண்.A3, சிட்கோ ஃபேஸ் 1, சிப்காட், ஒசூர் 635126. **தற்போதைய முகவரி : திருமதி.கனிமொழி, க/பெ.மோகன்ராஜ்,** 108, உள்ளியாளம் கிராமம், பாகலூர் மெயின் ரோடு, ஒசூர் - 635103. **கடன் நிலுவைத் தொகை : 27.08.2026 வரையில் ரூ.5,49,52,566.47 மற்றும் வட்டி, ஏனைய கட்டணங்கள் சேர்த்து. கேட்பு அறிவிப்பு தேதி : 01.10.2021. அடையாள சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி : 18.08.2026. சொத்து விபரம் :** 14.41 சென்ட் அல்லது 6283.00 சதுரடி விஸ்தீரணம் உள்ள நிலம் மற்றும் தொழிற்சாலை கட்டிடம் சகிதமான சொத்து பின்வருமாறு அமைந்துள்ளது. பிளாட் எண்.16, S.No. 597 பாகம், புதிய சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், ஸ்ரீ நகர், எலக்ட்ரிக்கல் & எலக்ட்ரானிக்ஸ் இன்டஸ்ட்ரியல் எஸ்டேட் அருகில், ஒசூர் நகர முனிசிபல் கார்ப்பரேஷன், கிருஷ்ணகிரி மாவட்டம் 635109. சொத்தின் எல்லைகள் : வடக்கில் 12 மீட்டர் சிட்கோ சாலை, தெற்கில் சிட்கோ CP நிலம், கிழக்கில் பிளாட் எண்.21, மேற்கில் 9 மீட்டர் சாலை. **M/s.அபிஷேக் இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்திற்கு சொந்தமான சொத்து. காப்பு விலை : ரூ.3,85,00,000.00. முன்வைப்புத் தொகை : ரூ.38,50,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-. . ஏலம் நடைபெறும் தேதி : 30.09.2026. ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை 10 நிமிட கால நீட்டிப்புடன் .** சொத்தினை பார்வையிடும் தேதி : **அனைத்து வேலை நாட்களிலும் 22.09.2026 முதல் 28.09.2026 தேதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி : 30.09.2026 மதியம் 1.00 மணி வரை. சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, ஒசூர் கிளை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 8489903009**

நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் : 1. ஏல விற்பனை ஆன்லைன் மின்னணு ஏலம் / ஏலம் கோருதல் என்ற முறையில் **https://baanknet.com** என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் (ஏலம் முடிவுக்கு வரும் வரையில் 10 நிமிடம் கால நீட்டிப்புடன்) நடைபெறும். **2.** ஏல விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் **30.09.2026,** மதியம் **1.00** மணி அளவிலோ அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பிக்க வேண்டும். **3.**மின்னணு ஏல விற்பனையானது **"எப்படி எங்கு உள்ளனவோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் நடைபெறும். **4.** விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏல நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஏல விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முன்பாக **https://baanknet.com** என்ற இணையதளத்திற்கு சென்று முழு விபரங்களுடன் கூடிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **5.** வெற்றிபெற்ற ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர், வருமான வரிச் சட்டம் 1961-ன் உட்பிரிவு 194 IAன் பிரகாரம் ரூ.50.00 லட்சம் மற்றும் அதற்கு மேலான மதிப்பினை உடைய அசையாச் சொத்துக்களின் விற்பனை நடைமுறைகளில் 1% TDS தொகையினை செலுத்த வேண்டும். இத்தொகையினை படிவம் 26QB ல் சலான் (Challan) பூர்த்தி செய்து செலுத்தியதன் பின்னர் அதற்கான TDS சான்றிதழின் அசல் இரசீதினை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். **6.** மேலும் சொத்து தொடர்பான விபரங்களை அறிய **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, ஒசூர், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 8489903009, முதன்மை மேலாளர் (RO) : Mob No : 8489903057, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, மண்டல அலுவலகம், கோயம்புத்தூர், மின்னஞ்சல் முகவரி :recvcoimro@centralbank.co.in,** அவர்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். ஏலதாரர் மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்து கொண்ட பின்னர், விருப்பமுள்ள ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர் பின்வரும் ஆவணங்களை ஏல விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் கடைசி தேதிக்கு முன்பாக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். 1) NEFT/RTGS சலான் ஆகியவற்றின் நகல், 2) PAN கார்டு நகல், 3) அடையாளச் சான்று (KYC) சுய சான்றளிக்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட், 4) முகவரிச் சான்று, மேற்கண்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்யாவிடில் ஏல விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை அறியவும்.

தேதி : 28.08.2026
இடம் : ஒசூர்
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா

தனியார் ஆம்னி பேருந்தில் ரூ. 19.50 லட்சம் கஞ்சா பறிமுதல்

2 பேர் கைது

ஒசூர், ஆக. 29: ஒசூர் அருகே பெங்களூரில் இருந்து சென்னை நோக்கி சென்ற தனியார் ஆம்னி பேருந்தில் ரூ. 19.50 லட்சம் மதிப்பிலான கஞ்சாவை பறிமுதல் செய்த போலீஸார், 2 பேரை கைது செய்தனர்.

கர்நாடக மாநிலம், பெங்களூரிலிருந்து ஒசூர் வழியாக சென்னை செல்லும் தனியார் ஆம்னி பேருந்தில் இருவர் கஞ்சா கட